**ஆற்காடு நகராட்சி**
**மன்றக் கூட்டப்பொருள்**
**<u>30.04.2020ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ள நகரமன்ற சாதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்</u>**

**பொருள் எண்.01)** இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் நாட்குறிப்பு 01.03.2020 முதல் 19.03.2020 வரை மற்றும் ஆணையாளர் (பொ) 20.03.2020 முதல் 31.03.2020 வரை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.
அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்
ந.க.எண்.0665/2018/சி1

**தீர்மானம் எண். 88 – பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.02)** இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச்–2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.
அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மானம் எண். 89 – பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.03)** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக கிருமி நாசினிகளை அவசர அவசியம் கருதி உடனடியாக வாங்க வேண்டி மேற்படி கிருமி நாசினி மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்க திரு. மு. செல்வராஜ் சுகாதார ஆய்வாளர் அவர்களுக்கு முன்பணமாக ரூ.50,000/– வீதம் இரண்டு தவணையாக வழுங்கப்பட்டு ஆக மொத்தம் ரூ.1,00,000/–யினை பெற்று வாலாஜா அக்ரோ சொசைட்டி என்ற நிறுவனத்திடமிருந்து தொகை ரூ.1,94,850/– மதிப்புள்ள கிருமி நாசினி மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்து சமர்ப்பித்துள்ளார் மேலும் கூடுதலாக செலவினம் செய்யப்பட்டுள்ள ரூ. 94,850/–ஐ திரு.மு.செல்வராஜ் சுகாதார ஆய்வாளர் தனக்கு வழுங்க கோரியுள்ளார் அவசர அவசியத்தினை கருதி சுகாதார ஆய்வாளர் அவர்களுக்கு முன்பணமாக ரூ.1,00,000/– வழுங்கி பொருட்கள் விநியோகம் பெற்றமைக்கும் பொருட்கள் வாங்கியதால் முன்பணமாக பெறப்பட்ட தொகையை காட்டிலும் கூடுதலாக ஏற்பட்ட செலவினம் ரூ.94,850/– ஐ சுகாதார ஆய்வாளருக்கு வழுங்கவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.
அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக அவசர அவசியம் மற்றும் பொது மக்கள் நலன் கருதி கொரோனா தொற்று பரவா வண்ணம் தடுக்க சுகாதார ஆய்வாளருக்கு முன்பணம் வழுங்கி தேவையான கிருமி நாசினி மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் நேரடியாக வாலாஜா அக்ரோ சொசைட்டி சர்வீஸ் கோ ஆப்ரேட்டிவ் சென்டர் என்ற கூட்டுறவு நிறுவனத்தில் பெற்று மேற்கொண்ட செலவினத் தொகைக்கு மன்ற அனுமதி எதிர் நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) அவசர அவசியம் கருதியும், தமிழ்நாடு அரசு 144 தடையுத்திரவு பிறப்பித்துள்ள காலமாதலால் ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலைப்புள்ளியினை கோர வாய்ப்பில்லாததலும் அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான வாலாஜா அக்ரோ செசைட்டியில் நேடியாக கொள்முதல் செய்யப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

4) மேற்படி செலவினத் தொகையினை SDRF 2019–20 நிதியின் கீழ் மேற்கொள்ள மனறம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 556/2020/எச்1

**தீர்மானம் எண். 90 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.04)** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு கொசு ஒழிப்பு பணியில் நான்கு மகளீர் குழு மூலம் 52 பணியாளர்களை கொண்டு தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதில் 31.03.2020 நாளுடன் முடிவடைவதால் இப்பணியினை மேலும் மூன்று மாதங்களுக்க 01.04.2020 முதல் 30.06.2020 வரையிலான நாட்களுக்கு அதே தினகூலி ரூ.277/– ன் அடிப்படையில் நீடித்து வழங்க தோராய செலவினத் தொகை ரூ.13.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் டெங்கு கொசு ஒழிப்பு பணி தொடர் நடவடிக்கையாக மேற்கொண்டு வருவதால் அதே தின கூலியின் அடிப்படையில் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடித்து 52 மகளீர் குழு பணியாளர்களுக்கு வழங்க மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் முன் ஒப்புதல் அளித்துள்ளமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) மேற்படி செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.2600/2015/எச்1

**தீர்மானம் எண். 91 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.05)** ஆற்காடு நகராட்சியின் கீழ் உள்ள சித்த மருந்தகத்திற்கு வரும் புற நோயாளிகளுக்கு சித்த மருந்துகள் வழங்க வேண்டியுள்ளதினால் தற்போது இருப்பு குறைவாக உள்ளதினால் 2020–2021ம் வருடத்திற்கு சித்த மருந்துகளை வாங்க சித்த மருத்துவ அலுவலர் அவர்கள் கேட்பு பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதற்கு, சென்னை இம்ப்காஸ் என்ற நிறுவனத்தின் மூலம் சித்த மருந்துக்களை வாங்க பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதற்கு சென்னை இம்ப்காஸ் நிறுவனத்தின் மூலம் சித்த மருந்துகளை வாங்க தோராய செலவினத் தொகை ரூ.150000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) இந்நகராட்சியின் சித்த மருந்தகத்திற்கு 2020–2021ம் வருடத்திற்கு சித்த மருந்துகளை வாங்க மன்றஅனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்கள் முன் ஒப்புதல் அளித்தள்ளமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) மேற்படி செலவினத் தொகையினை SDRF 2019–20 நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.426/2016/எச்1

**தீர்மானம் எண். 92 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.06)** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகள் மேற்கொள்ள கிருமி நாசினி மற்றும் பாதுகாப்பு உபகரனங்கள் உடனடியாக கொள்முதல் செய்ய வேண்டியுள்ளதால் அரசு அங்கீகரிக்கப்பட்ட தி வாலாஜா ஆக்ரோ இன்சிஞ்னியரிங் வாலாஜா, என்பவரிடம் நேரடியாக கொள்முதல் செய்ய தோராய செலவினத் தொகை ரூ. 10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) இந்நகராட்சி 30 வார்டு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோன வைரஸ் தடுப்பு பணிகள் மிக தீவிரமாக மேற்கொண்டு வருவதில் கிருமி நாசினி மற்றும் அதன் தொடர்புடைய பாதுகாப்பு உபகரனங்கள் உடனடியாக கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் முன் அனுமதி அளித்துள்ளமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

3) மேற்படி செலவினத் தொகையினை SDRF 2019–20 நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 556/2020/எச்1

**தீர்மானம் எண். 93 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.07)** இந்நகராட்சியில் குடிநீர் விநியோகம் பிரதான நீர் ஆதாரமாகிய வேப்பூர் மற்றும் பாலாற்றுப்படுகையில் காசிவிஸ்வநாதர் கோயில் அருகாமையில் அமைந்துள்ள கிணறு மற்றும் பெருமாள் கோயில் அருகாமையில் உள்ள நீர் உறிஞ்சு கிணறுகளில் இருந்து பெறப்படும் குடிநீரை கொண்டு 8 நீர்தேக்கத்தொட்டியில் நீரேற்றம் செய்யப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவைகளை பராமரிக்க குடிநீர் பணியாளர் பொறியியல் பிரிவில் குழாய் பொருத்துனர்–1, காவலர்–1, மதகு திறப்பாளர்–2, ஆகிய பணியிடங்களுக்கான பணியாளர்கள் தற்போது உள்ளனர். பிரதான நீரேற்று நிலையத்தில் மின்வலியர் பணியிடமும் காலியாக உள்ளது. மேலும் தெருவிளக்கு 2502 எண்ணிக்கையில் உள்ளதை 1 மின் கம்பியாளர் மற்றும் 1 மின்கம்பி உதவியாளர்கொண்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே 1 மின்கம்பியாளரை வேப்பூர் நீரேற்று நிலையத்திற்கு நிரந்தரமாக மின்வலியர் பணியை பார்க்க பணிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏற்கனவே 1 மின்கம்பியாளரை வேப்பூர் நீரேற்று நிலையத்திற்கு நிரந்தரமாக மின்வலியர் பணியை பார்க்க பணிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் 1 பணி ஆய்வர் பணியிடமும் காலியாக உள்ளது. மேலும் இந்நகராட்சிக்கு சொந்தமான ஜே.சி.பி மற்றும் ஈப்பு வாகனத்திற்கு தற்போது ஒட்டுநர் இல்லாத நிலை உள்ளது. மேற்கூறிய பணிகளுக்கு அவசியம் தேவையான 11 பணியிடங்கள் காலி பணியிடங்களாகவே உள்ளது. மேலும் குடிநிர்விநியோகம் ஏற்கனவே இருந்த ஒரு நாள்விட்டு ஒருநாள் வழங்கப்பட்டு வந்ததை தவிர்த்து தற்போது தினசரி வழங்கப்பட்டு வருகிறது. இதனால் தேவைக்கு குறைவாகவே உள்ள பணியாளர்களை கொண்டு பராமரி.பு செய்வது பணிச்சுமையாகவும், பணியில் தொய்வும் ஏற்படுகிறது. மேலும் சீரான முறையில் குடிநீர் விநியோகம் தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் பொறியியல் பிரிவில் கட்டுமான பணிகளை செவ்வனே மேற்கொள்ள போதுமான தகுந்த திறமையான பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தினக்கூலி 2019–20 விகிதத்தில் அமர்த்தி செயல்படுத்த வேண்டிய அத்தியாவசிய நிலை உள்ளது. மேலும் நகராட்சி மூலம் நேரடியாக தினக்கூலி பணியாளர்களை அமர்த்தி பணிகளை செயல்படுத்திட வாய்ப்பில்லாமல் உள்ளது. மேலும் இந்நிலையில் ஆற்காடு நகராட்சி பகுதியில் ஆண்கள் சுயஉதவிக்குழு நடத்திவரும் சபரி கிரிவாசன் ஆண்கள் சுயஉதவிக்குழு தங்கள் குழுவில் உள்ள உறுப்பினர்களின் தகுதிக்கேற்ற பணியை வழங்க வேண்டி மனு செய்துள்ளதை ஏற்று 11

பணியாளர்களை அவரவர் தகுதிக்கேற்ற பணியில் ஈடுபடுத்திக்கொள்ளவும், அதற்காகும் 3 மாத காலத்திற்கான தோராய உத்தேச செலவினம் ரூ.3,86,780/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. **1)** பொறியியல் பிரிவில் மேற்கொள்ளப்படும் அத்தியாவசிய பணிகளுக்கு பணியாளர்கள் அவசியம் தேவை என்பதால் சிறப்பினமாக கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** மேற்கண்ட பணியார்களுக்கான செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 94 — அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.08)** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் உள்ள சித்த மருந்தகத்திற்கு நோய் தடுப்பு மருந்தான கபசுர குடிநீர் சூரண கலவையினை வாங்கி பயன்படுத்தும்படி மத்திய அரசின் ஆயுஷ் அவர்களின் கடிதம் வேலூர் நகராட்சிகளின் மண்டல இயக்குநர் அவர்களின் வழியாக பெறப்பட்டுள்ளதற்கு கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவா வண்ணம் நோய் எதிர்ப்பு சக்தி பெற இந்நகர பொது மக்கள் மற்றும் பணியாளர்களுக்கு உடனடியாக வழங்க வேண்டியுதால் கபசுர குடிநீர் சூரண கலவை **150** கிலோ விநியோகம் செய்யுமாறு சென்னை டாம்கால் நிறுவனத்தில் கோரி பெற தோரய செலவினத் தொகை ரூ. **1.20** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:**1)** கொரோனா வைரஸ் நோய் தொற்றுயினை பொது மக்கள் மற்றும் பணியாளர்களுக்கு தடுக்கும் விதமாக நோய் எதிர்ப்பு சக்தி பெற கபசுர குடிநீர் சூரண கலவையினை அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறவனமாக சென்னை டாம்கால் நிறுவனத்தில் கொள்முதல் செய்ய மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் முன்ஒப்புதல் அளித்துள்ளமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**2)** மேற்படி செலவினத் தொகையினை கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு வரப்பெற்ற SDRF 2019—20 நிதியின் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். **1663/2015/**எச்**1**

**தீர்மானம் எண். 95 — அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.9)** கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதால் இந்நகர பொது மக்களிடம் இருந்து உபயோகப்படுத்தப்பட்ட கையுரைகள், முகவுரைகள் மற்றும் பாதுகாப்பு உபகரனங்கள் தனி மஞ்சள் நிற பையில் தனியாக சேகரிக்கப்பட்டு சென்னை கென் பையோ பிரவேட் லிமிடெட் என்ற முகவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என வேலூர் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுரைகளின் படியும் மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின சுற்றறிக்கை ந.க.எண். **5437/**ஜே**2/2020—14**, நாள்.**15.04.2020**ல் தமிழ்நாடு மாசு கட்டுப்பட்டு வாரியம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன சென்னை கென் பையோ பிரவேட் லிமிடெட் என்பவரிடம் ஒப்படைக்கலாம் என தெரிவிக்கப்பட்டதற்கு, இந்நகராட்சியில் சேகரமாகும் பொது மக்கள்/பணியாளர்கள் பயன்படுத்தப்பட்ட கையுரைகள், முகவுரைகள் மற்றும் பாதுகாப்பு உபகரனங்கள் தனி மஞ்சள் நிற பையில் தனியாக சேகரிக்கப்பட்டு பாதுகாப்பான முறையில் அழிக்க வேண்டி ஒரு மாதத்திற்கான செலவினத் தொகை ரூ.**20000/—** வீதம் **15** கிலோ அதிகமனால் ஒரு கிலோ ரூ. **55.00** என நிர்ணயம் செய்து

வழங்க தோரய செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) இந்நகரத்தில் சேகரமாகும் பயன்படுத்தப்பட்டு பெறப்படும் கையுரைகள், முகவுரைகள் மற்றும் பாதுகாப்பு உபகரனங்கள் தனி மஞ்சள் நிற பையில் தனியாக சேகரிக்கப்பட்டு பாதுகாப்பான முறையில் அழிக்க வேண்டியுள்ளதால் இதனை தமிழ்நாடு மாசு கட்டுப்பட்டு வாரியத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான சென்னை கென் பையோ பிரவேட் லிமிடெட் என்பவரிடம் ஒப்படைத்து அதற்கான செலவினத் தொகையினை வழங்க மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்றப்பட்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3)மேற்படி செலவினத் தொகையினை SDRF 2019–20 நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.556/2020/எச்1

**தீர்மானம் எண். 96 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10)** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் இருப்பதற்கு பொதுமக்களின் நலன்கருதி பேரூந்து நிலையம் முழுவதும் சுற்றி GI தகடு வைத்து தடுப்புவேலி அமைத்தல் மற்றும் நகராட்சிக்குட்பட்ட பிரதான சாலைகளை இணைக்கும் சந்து பகுதியில் மற்றும் தெருக்களில் வாகனப்போக்குவரத்தை தடுக்கும் வகையில் GI தகடு வைத்து தடுப்புவேலி அமைத்தல் பணியினை திருமதி.B.ஹயாதிபீ ஒப்பந்ததாரர் மூலம் ரூ.1,17,150/- க்கான செலவினத்தில் SDRF-2019-2020 ல் நகராட்சிகள் சட்டம் பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 97 – பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.11)** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகள் மேற்கொள்ள கிருமி நாசினி மற்றும் அதன் சம்மந்தப்பட்ட உபகரனங்கள் உடனடியாக கொள்முதல் செய்ய வேண்டியுள்ளதால் அரசு அங்கீகரிக்கப்பட்ட தி வாலாஜா ஆக்ரோ இன்ஜினியரிங் வாலாஜா, என்பவரிடம் நேரடியாக கொள்முதல் செய்ய தோராய செலவினத் தொகை ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு.** 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) இந்நகராட்சி 30 வார்டு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோன வைரஸ் தடுப்பு பணிகள் மிக தீவிரமாக மேற்கொண்டு வருவதில் கிருமி நாசினி மற்றும் அதன் தொடர்புடைய உபகரனங்கள் உடனடியாக கொள்முதல் செய்ய மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் முன் அனுமதி அளித்துள்ளமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

3) மேற்படி செலவினத் தொகையினை SDRF 2019–20 நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 556/2020/எச்1

**தீர்மானம் எண். 98 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12)** ஆற்காடு நகராட்சிக்கு சொந்தமாக 12 ஆண்டு குத்தகை இனங்கள் மற்றும் 168 கடைகள் உள்ளது. மேற்படி ஆண்டு குத்தகை இனங்கள் மற்றும் கடைகளுக்கு வாடகையுடன் சேவை வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. புதிய சேவை வரி கொள்கை 01.07.2007 முதல் மத்திய கலால் துறையினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 01.07.2007 முதல் ஆற்காடு நகராட்சியால் சேவை வரி செலுத்தாமல் நிலுவையில் இருந்து வந்தது. இந்நிலையில் இராணிப்பேட்டை கோட்டம் மத்திய கலால் வரி ஆணையரின் கடிதம் C.NO.IV/16/165/2012-S Tax, dated 24.07.2018-ன்படி, 2007-2008ம் ஆண்டு முதல் 2017-2018ம் ஆண்டு வரையான 9 ஆண்டுகளுக்கு சேவை வரி (Service Tax) தொகை மற்றும் ஒவ்வொரு 6 மாத காலத்திற்கும் written file செய்ய வேண்டியது அவசியமாக்கப்பட்டது. மேற்படி கடிதத்தின்படி செய்ய தவறினால் நகராட்சியின் வங்கி கணக்குகள் மற்றும் சொத்துக்கள் முடக்கம் செய்யும் நிலையும் இருந்தது. இதனை தவிர்க்கும் பொருட்டு 2007-2008 முதல் 2017-2018 வரையான 9 ஆண்டு காலத்திற்கு சேவை வரி செலுத்துதல் மற்றும் ஒவ்வொரு 6 மாதத்திற்கும் written file செய்தல் பணி செய்து முடிக்கப்பட்டது. இதற்காக இந்நகராட்சி சார்பாக Thiru.K.Sathiskumar, Ambagava Tax Solutions, Vellore-1 (Cell No.99420 60085) அவர்களிடம் பணி ஒப்படைக்கப்பட்டது. பணி முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.30,000/- பெறப்பட்டுள்ளது. திரு.கே.சத்தீஸ்குமார் என்பவர் பணி முடித்தமைக்கு ரூ.30,000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1) திரு.கே.சத்தீஸ்குமார், Ambagava Tax Solutions, Vellore-1 அவர்களை இந்நகராட்சி சார்பாக பணி செய்ய நியமனம் செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.
2) 2007-2008 முதல் 2017-2018 வரையான 9 ஆண்டுகளுக்கு சேவை வரி மற்றும் written file செய்தமைக்கு பட்டியல் தொகை ரூ.30,000/-னை பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1824/2018/அ1)

**தீர்மானம் எண். 99 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13)** நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணைக்கிணங்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் ஆய்வுகூட்ட அறிவுரையில் ஆற்காடு நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் மூலம் கொரோனா வைரஸ் தொற்றினை கட்டுப்படுத்த வேண்டி துய்மைப்பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கிருமி நாசினி தெளிக்க தெளிப்பான்கள் முதலியவைகளை தட்டுப்பாடற்ற அளவிற்கு கையிருப்பில் வாங்கி வைத்திருக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது நாடுதழுவிய அளவில் நோய் தடுப்பு நடவடிக்கைகள் நடைமுறையில் இருப்பதாலும் நாடுதழுவிய ஊரடங்கு நடைமுறையில் உள்ளதால், பாதுகாப்பு உபகரணங்கள் மருத்துவ பொருட்கள், கிருமி நாசினி முதலியவைகள் வாங்குவதற்கு ஒரே நிறுவனத்தில் விநியோகம் செய்ய அணுகும் நிலையில்

காலதாமதம் ஏற்படும் நிலை உள்ளதால் எதிர் வரும் சூழ்நிலையினை கருத்தில் கொண்டும், மேலும் நோய் தொற்று பரவாமல் கட்டுப்படுத்த வேண்டி கூடுதல் அளவில் உடனடியாக கொள்முதல் செய்ய வேண்டியுள்ளதால் தோராய செலவினத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | விநியோகஸ்தர் பெயர் | Mask Triple layer – 1 No. (Rs.) | Rubber Gloves 1 Pack – 50 Pair (Rs.) | PPE kit 1 No. (Rs.) |
|---|---|---|---|---|
| 1. | Saravanan & Co. | 9.97 | 952.00 | 414.75 |
| 2 | Radiaant Textiles | 11.55 | 978.88 | 430.50 |
| 3. | Espen Enterprises | 10.50 | 868.00 | 405.00 |

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) இந்நகராட்சியில் பணிபுரியும் களப்பணியாளர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பாதுகாப்பான உபகரணங்கள் உடனடியாக வாங்க வேண்டியுள்ளதால் அரவச அவசியம் கருதி குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள Saravanan & Co. வில் கொள்முதல் செய்ய மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் முன் அனுமதி அளித்துள்ளமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

3) மேற்படி செலவினத் தொகையினை SDRF 2019–20 நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 556/2020/எச்1

**தீர்மானம் எண். 100 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14)** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் மூலம் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டு வருவதால் இந்நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர் மற்றும் களப்பணியாளர்களுக்கு காய்ச்சல் இருக்கின்றனவா என சோதனைகள் செய்ய தெர்மல் ஸ்கேனர் மூன்று மற்றும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு அறிவிப்பு செய்திட வாகன மைக் செட் ஒன்றும் தேவைக்கு உடனடியாக விநியோகம் செய்ய 28.04.2020ம் நாளில் ந.க.எண்.556/2020/எச்1ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. கீழ் கண்ட மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதற்கு ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் முன் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது. மேலும் மேற்படி தோராய செலவினத் தொகை ரூ.35000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | விநியோகஸ்தர் பெயர் | Infrared Thermometter Rs. | Ahuja Radio set Rs. |
|---|---|---|---|
| 1. | Shree Barirava Green lines, Jolarpettai | **21240** | 8700 |
| 2 | Jss Enterprises, Vaniyambadi | **25134** | 11900 |
| 3. | Aikon Power Technology, Chennai | **30090** | 14259 |

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) இந்நகரட்சியில் கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணியில் ஈடுபடும் தூய்மை பணியாளர்கள் மற்றும் களப்பணியாளர்களை பணியின் போது கய்ச்சல் உள்ளனவா என சோதனை செய்ய மூன்று தெர்மல் செக்கர்ஸ் மற்றும் வாகன மைக் செட் ஒன்று தேவைக்கு 28.04.2020 நாளில் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வ.எண். 1 Shree Barirava Green lines, Jolarpettai என்பவர் குறைவான விலைப்புள்ளி வழங்கப்பட்டதால் அன்னாருக்கு விநியோக உத்திரவு வழங்க மன்ற அனுமதியை எதிர் நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) மேற்படி செலவினத்தை கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்கு பெறப்பட்டுள்ள SDRF 2019–20 நிதியின் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதலம் வழங்கலாம்.

ந.க.எண்.556/2020/எச்1

**தீர்மானம் எண். 101 – அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15 )** ஆற்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் உள்ள ஜெயம் நகர் நூண்ணுயிர் மையத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை தரம் பிரித்து எருவாக்கும் பணிக்கு தற்போது பணிபுரிந்து வருகின்ற மகளீர் சுய உதவி குழு பணியாளர்கள் 6 நபர்கள் மூலம் தொடர்ந்து 01.05.2020 முதல் 31.08.2020 வரை மூன்று மாதஙகளுக்கு 2019–2020ம் வருடத்திற்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் அவித்துள்ள அதே விலைவிகிதத்தில் (S.No.1 Unskilled Labours – 320/–) பணியினை மேற்கொள்ள தோராய செலவினத் தொகை ரூ.1.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழஙகலாம்.
2. திடக் கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ஜெயம் நகர் நூண்ணுயிர் மையத்தில் குப்பைகளை எருவாக்கும் பணியினை தொடர்ந்து மேற்கொள்ள ஆறு மகளீர் குழு பணியாளர்களை கொண்டு மேலும் மூன்று மாதஙகளுக்கு மேற்கொள்ள மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளமைக்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.
3. மேற்படி செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

ந.க.எண்.2626/2017/எச்1.

**தீர்மானம் எண். 102 – அனுமதிக்கப்பட்டது.**

**ஆற்காடு**
**நாள்:30.04.2020**

**தனி அலுவலர்,**
**ஆற்காடு நகராட்சி.**